**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 105.95 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 100.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாட்டிலான சேமிப்பு ரூபா 5.65 மில்லியன் அல்லது 5.32 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>தேறிய ஏற்பாடு | <br>பயன்பாடு | <br>சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 72.80 | 67.28 | 5.52 | 7.58 |
| மூலதனம் | 33.15 | 33.02 | 0.13 | 0.39 |
| **மொத்தம்** | 105.95 | 100.30 | 5.65 | 5.33 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ரூபா 163,383,508 மில்லியன் நிதியேற்பாடு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 163,265,361 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் வழங்கப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 118,147 தொகை அல்லது நிதியேற்பாடுகளில் ரூபா 0.07 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 30301 விடய இலக்கம் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.50 | 5.47 | 3.00 | 3.38 | 25.00 | 13.38 |

## 2.3 பொது வைப்புக்கணக்கு

திணைக்களத்தின் கீழான 05 பொதுவைப்புக் கணக்குகளின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10.25 மில்லியன் ஆகும். விபரங்கள் பின்வருமாறு

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0124/000 | 2.66 |
| 6000/0000/00/0002/0174/000 | 0.13 |
| 6000/0000/00/0013/0132/000 | 2.64 |
| 6000/0000/00/0016/0121/000 | 1.19 |
| 6000/0000/00/0017/0031/000 | 3.63 |
| | **10.25** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் திணைக்களத்தால் பொறுப்புக்கள் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.2.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (ஆ),(இ) மற்றும் 4.2.2 (அ) வழிகாட்டலின் பிரகாரம், கொள்வனவு நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட கொள்வனவு நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான கொள்வனவுத் திட்டம் விரிவாக தயாரிக்கப்பட்டு எதிர்வரும் ஆண்டிற்கான கொள்வனவு நேர பட்டியல்களும் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களம் பெறுகைத்திட்டத்தை தயாரிக்கவில்லை.

### 3.2.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 இன் டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

இந்தக் குழுவானது திணைக்களத்தில் செயற்படாதிருப்பதுடன் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு சமூகமளிப்பதில்லை.

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைப்பயன்பாடுடன் காணப்பட்டதாக கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

(i) கஹவட்டவிலுள்ள ஹிறமடஹம ஆடைத்தொழிற்சாலை பயிற்சி பாடசாலை 2011 ஆம் ஆண்டிலிருந்து யெற்பாடற்ற நிலைமையிலிருந்தது.

(ii) திணைக்களத்திற்குரிய வாகனமொன்று 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், மற்றுமொரு வாகனம் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் இந்த வாகனங்கள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் வரையிலும் ஏலத்திற்கு விடப்பட்டிருக்கவில்லை.

(iii) காணிக்குள் நுழைவதற்கு எந்த ஒழுங்கையும் இல்லாத இராஜகிரியவிலுள்ள இயற்கை கலரிங் நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் 05 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க காணிக்குரிய உறுதியோ அல்லது திணைக்களத்திற்கு உரிமையுடையது என நிரூபிப்பதற்கான ஆவணங்களோ கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டில் இந்த நிலையத்திற்காக ரூபா 208,620 தொகையை செலவழிப்பதன் நிர்மாணமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான 01 வருடத்திற்கு குறைந்த காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 511,916 ஆகும்.

**3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 1646 | திணைக்களத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு |

| | | |
|---|---|---|
| | | முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2013 யூலை 12 இன் எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கை | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் மதிப்பீட்டின் தொழிற்பாடு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.5 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பிலான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

### (அ) நெசவுக் கைத்தொழிலின் பயிற்சி பாடசாலைகளுக்காக மாணவர்களை உட்சேர்த்தல்

கைத்தறி நெசவுக் கைத்தொழில் தொடர்பான பூரண அறிவினையும், பயிற்சியையும் வழங்குவதற்கும் கைத்தொழில் துறைக்கு தேவையான முகாமையாளர்கள், அறிவுறுத்தாளர்கள் மற்றும் முயற்சியாளர்களையும் உருவாக்கும் நோக்கில் நாடெங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் நெசவுக் கைத்தொழில் பயிற்சி பாடசாலைகள் நிறுவப்பட்டு வருடாந்தம் மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், (2015 யூலை 02 ஆந் திகதி முதல் 2016 யூலை 31 ஆந் திகதி வரையான) காலப்பகுதிக்குரிய ஒரு வருட நெசவுக் கைத்தொழில் பயிற்சி பாடநெறியொன்றிற்காக 175 மாணவர்களை இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக 161 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கையானது 135 மாத்திரமேயாகும்.

### (ஆ) வடிவமைப்பு பயிற்சி பாடசாலைகளுக்காக மாணவர்களை உட்சேர்த்தல்

நாட்டின் தனித்துவம் மற்றும் கலாச்சாரத்திற்கு பொருந்தும் வகையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் நடவடிக்கைகளை வெற்றிக்கொள்ள கூடிய வகையில் கைத்தறி நெசவுக் கைத்தொழில் துறையின் ஆக்கபூர்வமான மற்றும் போட்டித்தன்மையான புடவை உற்பத்தியில் உற்பத்தியாளர்களை ஈடுபடுத்தும் நோக்கில் வடிவமைப்பாளர்களை பயிற்சியளிப்பதற்காக ஒரு வருட தங்குமிட வசதியுடனான வடிவமைப்பு பயிற்சி பாடநெறியொன்று கெட்டம்பே மற்றும் கட்டுப்பெத்த பயிற்சி பாடசாலைகள் மூலம் நடாத்தப்பட்டிருந்தது. 2016 சனவரி 18 ஆந் திகதி முதல் 2017 சனவரி 17 ஆந் திகதி வரையான கல்வியாண்டிற்காக 25 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 20 பேர் மாத்திரமேயாவதுடன், அவற்றுள் 19 மாணவர்கள் மாத்திரம் பாடநெறியை நிறைவு செய்திருந்தனர்.

### (இ) தனியாளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துதல்

நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளில் 2015/2016 மற்றும் 2016/2017 கல்வியாண்டுகளுக்காக 328 மாணவர்களும், நிர்மாண வடிவமைப்பு பயிற்சி பாடசாலைகளுக்கு 2016 ஆம் கல்வியாண்டிற்காக 20 மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். எனினும், மேற்படி மாணவர்களுக்காக 03 ஆளுகை

அபிவிருத்தி பயிற்சிபட்டறைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக 144 மாணவர்கள் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

**(ஈ) தேசிய கைத்தெறி நெசவுக் கண்காட்சி**

----------------------------------------------------------------------

நெசவுக் கைத்தொழிலின் முயற்சியாளர்களின் விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கில், ஒரு தடவைக்கு ஒரு முறை நடாத்தப்படுகின்ற கைத்தெறி நெசவுக் கண்காட்சியானது 2016 திசெம்பர் 09 இலிருந்து 2016 திசெம்பர் 11 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது. 35 முயற்சியாளர்களுக்கு மாத்திரம் விற்பனை வசதிகள் வழங்கப்பட்டதுடன் பரிசு வெற்றியாளர்கள், மண்டபத்தை பதிவு செய்தல், புத்தாக்கங்கள் மற்றும் விளம்பரங்களை காட்சிப்படுத்தல் போன்றவற்றிற்காக ரூபா 8,893,521 தொகை செலவழிக்கப்பட்டது.

**(உ) வியாபாரச் சந்தை**

---------------------------------

சிறய மற்றும் நடுத்தரளவு தொழிற்சாலைகளின் விற்பனைகளை மேம்படுத்தலிற்கான வியாபார சந்தையானது 2016 மார்ச் 25 இலிருந்து 27 வரையான மூன்று நாட்கள் காலத்தின்போது பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இது தொடர்பில் 34 முயற்சியாளர்களிற்கு வியாபார வசதிகள் வழங்கப்பட்டது. மண்டபங்களை பதிவு செய்வதற்கும், அதற்கான விற்பனைக் காட்சிகூடங்கள் மற்றும் விளம்பரங்களை மேற்கொள்வதற்கும் ரூபா 2,314,058 தொகை செலவழிக்கப்பட்டது.

**(ஊ) நோக்கங்களை அடைதல்**

----------------------------------------------

கைத்தொழில் நெசவுத் தொழிலின் அபிவிருத்திக்கான கொள்கைகளை தயாரித்தல், துறைக்குரிய புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், மற்றும் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகள், கைத்தொழில் நெசவு கைத்தொழிலின் அபிவிருத்திக்கு தேவையான ஆராய்ச்சிகள் மற்றும் பரீட்சிப்புக்கள் மற்றும் பாதுகாப்பு செய்முறைகள் போன்ற நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.6 வழமைக்கு மாறான கொடுக்கல் வாங்கல்கள்**

--------------------------------------------------------------------------------

திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் வழமைக்கு மாறாகவிருந்தது. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) தலவாவிலுள்ள நெசவுப் பாடசாலையை திருத்தல்**

-------------------------------------------------------------------------------------

தலவாவிலுள்ள நெசவுப் பாடசாலையினை திருத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,776,062 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரிடமிருந்து பெறப்பட்ட விலைமனுக்களை விட விலைமனுதரார்களிடமிருந்து மூடிய விலைமனுக்கள் பெறப்பட்டமையால் விலைமனு ஆவணங்களுக்கிணங்க இது வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் அத்தகைய விலைமனுதாரர் தொடர்பினை விபரங்கள் கோவையில் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ii) 2016 ஆகஸ்ட் 16 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் உபபிரிவு 8(அ) இன் பிரகாரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட சான்றிதழை

அடிப்படையாகக் கொண்ட மதிப்பிடப்பட்ட பெறுமதியிலிருந்து 50 சதவீதத்தை விட அதிகமாக பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதியிலிருந்து ஒப்பந்தகாரர்களுக்கு 75 சதவீதத்தை செலுத்துவதற்கு இணங்கப்பட்ட போதிலும் 2016 ஒக்தோபர் 18 அளவில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 907,870 ஆகவிருந்ததுடன் மொத்தப்பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட உடன்படிக்கையின் 8(ஆ) ஆம் உபபிரிவின் பிரகாரம் வேலையானது திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டது என சான்றுறுதிப்படுத்திய பின்னர், பிணை முறியாக 06 மாதங்கள் காலப்பகுதிக்காக இனங்கப்பட்ட ஒப்பந்த தொகையிலிருந்து 5 சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் ரூபா 43,409 தொகையான பிடிகாசு அண்ணளவாக 04 மாதங்கள் காலப்பகுதியில் 2017 மார்ச் 22 இல் வெளியிடப்பட்டிருந்தது.

**(ஆ) பெறுகை வழிகாட்டிகளுடன் இணங்காமை**

மீளாய்வாண்டின் போது 08 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்கள் சீரமைக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அவைகளின் பெறுமதி ரூபா 2,499,299 ஆகவிருந்தது.

**3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

**நட்டஈட்டுக் கொடுப்பனவு**

1980, 1981, 1982 ஆம் ஆண்டுகளில் தனியார்மயப்படுத்தப்பட்ட நெசவுத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான நாடா நெசவுத்தொழிற்சாலைகளில் 10 வருடங்கள் காலப்பகுதியை விட குறைவாக வேலைசெய்த ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு 2013 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 45,834,000 தொகையான நட்டஈடு மீளாய்வாண்டின் இறுதியளவில் 445 நட்டஈட்டு பெறுவனவர்களிற்காக வழங்கப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக 06 மாதங்கள் கடந்த 2013 இல் வழங்கப்பட்ட நட்டஈட்டு காசோலைகள் பொதுவைப்புக் கணக்குகளிற்கு செலவுவைக்கப்பட்டதுடன் ரூபா 3,630,543 மீதி மீளாய்வாண்டின் இறுதியளவில் பொது வைப்புக் கணக்குகளில் மீதமாகவிருந்தது.

**3.8 முகாமைத்துவக் குறைபாடுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு சொந்தமான நார் நெசவுக் கைத்தொழில் முயற்சிகள் தனியார் துறைக்கு நீண்டகால குத்தகைக்கு அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1995 யூலை 21 ஆந் திகதிய எஸ்ஈஜ/ஏ/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தினால் அரச காணிகளை சுவீகரித்தல் தொடர்பான வழிகாட்டல் எனும் பெயரில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(i) சுற்றறிக்கையின் 8(ஈ) பந்தியின் பிரகாரம், குத்தகை வாடகையினை செலுத்துவதை புறக்கணிக்கின்றமையால் குத்தகை ஒப்பந்தமான தானாக இரத்துச் செய்யப்படுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும்,

யட்டிநுவர நெசவுத் தொழிற்சாலைகள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சுற்றறிக்கையின் 9 ஆவது பந்தியின் பிரகாரம் குத்தகையாளரால் குத்தகை ஒப்பந்தம் உரிய முறையில் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், நிலுவை பணத்தினை சேர்ப்பதற்கு இடமளிக்காமல் குத்தகை வாடகையினை சேகரிக்க வேண்டும். எனினும், யட்டிநுவர, தலாதுஓய மற்றும் உடுநுவர நெசவுக் கைத்தொழிற்சாலைகள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் குத்தகை நிலுவை ரூபா 7,396,000 ஆகவிருந்தது.

(ஆ) 1996 சனவரி 01 ஆந் திகதி முதல் ரூபா 150,000 தொகையான வருடாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த பிபிலவிலுள்ள நிம ஹம நிறுவனத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதி காணி மற்றும் கட்டிடம் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன், அத் திகதியே பிரதேச செயலாளருக்கு அந்த ஆதனங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,681,250 தொகையான குத்தகை தொகையினை 2017 ஆகஸ்ட் 31 இலும் அறவிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1993 சனவரி 31 ஆந் திகதி ரூபா 108,000 தொகையான வருடாந்த குத்தகைக்கு அமைய ஹிங்குரக்கொட நார் நெசவுக் கைத்தொழிற்சாலை அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகையாளரால் குத்தகை கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டமையால் 2001 பெப்ரவரி 12 ஆந் திகதி பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் குறித்த ஒப்பந்ததாரரிடம் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 529,600 தொகையான நிலுவை குத்தகை தொகையினை அறவிடுவதற்கு 2017 ஆகஸ்ட் 31 இலும் நடவடிக்கை எடுப்பதற்கு இயலாதிருந்தது.

(ஈ) குருவிட்ட நார் தொழிற்சாலை கொள்வனவாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய தொகையை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம், ரூபா 1,355,079 திரிப்பாகங்கள் தண்டப்பண வட்டியாக ரூபா 225,846 தொகை அறவிடவேண்டியிருந்ததுடன் மேலும் நிலுவையாகவுள்ள வருமதிகள் 2017 ஆகஸ்ட் 31 இலும் அறவிடமுடியா நிலையிலிருந்தது.

(உ) யட்டிநுவர நார் நெசவுக் கைத்தொழில் கூடம் 1995 யூலை 14 ஆந் திகதி முப்பது வருட குத்தகையின் அடிப்படையில் ரூபா 212,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த காணியின் ஒரு பகுதியில் அத்துமீறிய குடியிருப்பாளர் ஒருவர் வசித்து வருவதுடன், அந்த சிக்கலைத் தீர்த்து காணியை விடுவித்து சுமுகமான உரித்தினை ஒப்பந்ததாரருக்கு கையளிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக குத்தகைக்கு வழங்கிய திகதியிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 2,756,000 தொகையான குத்தகை பணத்தை 2017 ஆகஸ்ட் 31 வரையிலும் அறவிடமுடியாது போயிருந்தது.

(ஊ) தலாது ஓய நார் நெசவுக் கைத்தொழிற்சாலை 2000 திசெம்பர் 01 ஆந் திகதி ரூபா 148,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு முப்பது வருட குத்தகை அடிப்படையில் குத்தகையளிக்கப்பட்டிருந்தது. குத்தகையாளரால் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 2000 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையும் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையுமான 08 வருடக் காலப்பகுதிக்காக மாத்திரம் அறவிடவேண்டிய ரூபா 1,184,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அறவிடவேண்டிய ரூபா 1,184,000 குத்தகை வாடகையை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(எ) உடுநுவர நார் நெசவுக் கைத்தொழிற்சாலை 2000 பெப்ரவரி 01 ஆந் திகதி ரூபா 216,000 தொகையான வருடாந்த குத்தகை தொகைக்கு முப்பது வருட குத்தகையின் அடிப்படையில் குத்தகையளிக்கப்பட்டிருந்த போதிலும், குத்தகையாளரால் இந்த இடத்தில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன், 2016 பெப்ரவரி 01 ஆந் திகதியளவில் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,456,000 தொகையான குத்தகை தொகையினை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட முடியாது போயிருந்தது.

(ஏ) களுத்துறை நார் கைத்தொழிலின் இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,694,443 தொகையை அறவிடுவதற்கு வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. 1992 ஏப்ரல் 22 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் அந்த தொகை 36 தவணைகளில் செலுத்தி முடிக்க வேண்டிய போதிலும், 1999 ஆம் ஆண்டளவில் காலத்திற்கு காலம் ரூபா 702,480 மாத்திரம் அறவிடப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,991,962 தொகை நிலுவையாக இருந்ததுடன், அதனை அறவிடுவதற்கு சட்டமா அதிபரின் அறிவுரை வினவப்பட்டிருந்தது. வழக்கினை தொடருவதற்காக சிவில் வழக்கு கட்டளைக் கோவையின் 337(1) ஆம் பிரிவின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிடுவதற்கான காலம் கடந்திருந்தமையால் அதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லையென சட்டமா அதிபர் குறிப்பிட்டிருந்தார்.

(ஐ) திஸ்ஸமஹராயவிலுள்ள நார் கைத்தொழிற்சாலை முப்பது வருட குத்தகையின் கீழ் 1995 செப்தெம்பர் 07 இலிருந்து ரூபா 60,000 வருடாந்த குத்தகை அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் வருடாந்த குத்தகை வாடகை ரூபா 900,000 வரை திருத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட தொகையை 2016 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரைக்கும் அறவிடமுடியாதிருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 03 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 83 | 26 |
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 34 | 08 |
| | | ----------- | -------- | ---------- |
| | **மொத்தம்** | **157** | **120** | **37** |
| | | ==== | ===== | ===== |

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 37 வெற்றிடங்கள் இருந்ததுடன் அதில் 07 வெற்றிடங்கள் பதவிகள் இல்லாமல் செய்யாமையில் வேலைக்கமர்த்த முடியாதிருந்த வெற்றிடங்களாகவிருந்தது. திணைக்களமானது மீதமாகவுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

(ஆ) 2007 செப்தெம்பர் 04 இலிருந்து பிரதம உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பதவியும் 2008 நவம்பர் 14 இலிருந்து நிர்வாக உத்தியோகத்தர் பதவியும் வெற்றிடமாகவிருந்தும் அத்தகைய உத்தியோகத்தர்களை வேலைக்கு சேர்ப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தவறியிருந்தது.